# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதிவிசேஷமானது

අංක 127/3—1981 පෙබරවාරි 09 වැනි සඳුදා—1981.02.09

127/3 ஆம் இலக்கம்—1981 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.—பி. 10/80.

**1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்**

16 (2) ஆம் பிரிவின்கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு, தொழில் அமைச்சர் சிறில் பென்டோ ஜயதிலக செனவிரத்ன ஆகிய நான் அவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஊழியங்கள் தொடர்பில், 1981 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆம் நாளை, இக்கட்டளைமூலம், நிர்ணயிக்கின்றேன்.

சி. பி. ஜே. செனிவிரத்ன,
தொழில் அமைச்சர்.

1981, 5 பெப்புருவரி.

அட்டவணை

1. 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஏதேனும் அரச பொறுப்புமுயற்சியொன்றின் சேவையில் உள்ள ஊழியம்.

2. 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்டதும், 150 ற்குக் குறையாத ஊழியர்களைக் கொண்டதுமான ஏதேனும் தனியார்துறை பொறுப்புமுயற்சியொன்றின், சேவையில் உள்ள ஊழியம்.

2-408

---

**1979 யின் ஸ்ரீ லங்கா ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின்கீழான கட்டளை**

1979 யின் 40 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவின் கீழ் வியாபார கப்பற் போக்கு வரத்து அமைச்சரான லலித் வில்லியம் அதுலத்முதலியாகிய நான் 1981.01.01 தொடக்கம் 3 வருட காலத்திற்கு வெள்ளைத் தும்பு மீதிலான ஏற்றுமதி அபிவிருத்தி ஆய்வுரைச் சபைக்கு பின்வரும் அங்கத்தவரை நியமிக்கின்றேன் :—

(1) திரு. பந்துல எஸ். டி. சில்வா
(2) திரு. சுமித் டி சில்வா
(3) திரு. எல். என். குணவர்த்தன
(4) திரு. டி. ஏ.ஜயசுந்தர
(5) திரு. அலொய் பீரிஸ்
(6) திரு. ஐ. சி. ஜே. பிலிப்ஸ்
(7) திரு. எச். எம். ரணசிங்க
(8) திரு. ரி. கே. ஜி. ரணசிங்க
(9) திரு. கே. என். ரி. சீலநாதா

லலித் அதுலத்முதலி,
வியாபார கப்பற்போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1981.02.06 ஆந் திகதி,
2-424

---

எல்பீபி/8/194/85,

**1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டம்**

6 ஆம் பிரிவின் கீழான சான்றிதழ்

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிருமாணத்துறை அமைச்சர் ரணசிங்க பிரேமதாசா ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக கீழ்க்காணப் படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினுற் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப்படுத்து கின்றேன்.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி, வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சர்.

கொழும்பு,
1981, ஜனவரி 26.

அட்டவணை 1

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், பருத்தித்துறை, கரவெட்டி உ. அ. அ. பிரிவு, அல்வாய் தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள, முத்துமாரி அம்மன் என்றழைக்கப்படுகின்ற காணிக்குள்ளே கிட்டத்தட்ட 07 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு—வடிகால் ; கிழக்கு—வடிகால் ; தெற்கு—ஒழுங்கை ; மேற்கு—தனிப்பட்ட காணி.

அட்டவணை 2

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், பருத்தித்துறை, கர வெட்டி உ. அ. அ. பிரிவு, அல்வாய் தெற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் கோவிலடி என்றழைக்கப் படுகின்ற காணிக்குள்ளே கிட்டத்தட்ட 03 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு—ஒழுங்கையும், கோயில் காணியும் ; கிழக்கு—ரோட்டு ; தெற்கு—கி. ச. ரோட்டு ; மேற்கு—ஒழுங்கை.

2-442/1

---

எல்பிபி/8/198/80,

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டம்

6 ஆம் பிரிவின் கீழான சான்றிதழ்

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், உள்ளூராட்சி, வீடமைப்பு, நிருமாணத்துறை அமைச்சர் ரணசிங்க பிரேமதாசா ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக கீழ்க்காணப் படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட வேண்டுமென இத்தால் அத்தாட்சிப்படுத்து கின்றேன்.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி, வீடமைப்பு நிருமாணத்துறை
அமைச்சர்.

கொழும்பு,
1981, ஜனவரி 26.

அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு, பண்டத்தரிப்பு கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள, சந்தை என்றழைக்கப்படுகின்ற காணிக்குள்ளே கிட்டத்தட்ட 12 ஏக்கர் 03 றூட்டு விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு. அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு—வைத்தி, பெரியராசா மற்றவர்களுக்கும் சொந்தமான காணி ; கிழக்கு—பழைக்கட்டை வீதி ; தெற்கு—கோவிலுக்கும் ஒழுங்கைக்கும் சொந்தமான காணி ; மேற்கு—திருமதி அல்பிரட் டுக்கும், பெரியராசா அவர்களுக்கும் சொந்தமான காணி.

2-442/2

NATIONAL LIBRARY OF SRI LANKA NLSL

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது